சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 39/2020

பெயர். திருமதி. சொக்கம்மாள் க/பெ. அண்ணாமலை நாள் 08.09.2025

**மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) மருத்துவமனைக்கு என்னை அழைத்துச் சென்ற சிவகுமார் என்பவர் என் ஊர்க்காரர். நான் சாலையைக் கடக்கும் பொழுது தான் கார் வந்து இடித்தது என்றால் சரியல்ல. நான் ஓரமாக சென்று கொண்டிருந்தபோது தான் கார் வந்து இடித்தது. அந்த கார் என்னை இடித்து பின்னர் மற்றொரு கார் மீது மோதி என்னை இடித்ததா என்றால் இல்லை. ம.த.சா.ஆ.4ல் சாலையைக் கடக்கும் போது விபத்து ஏற்பட்டது என்று குறிப்பு உள்ளது என்றால் சரிதான். என்னுடைய ஆதார் அட்டைப்படி என்னுடைய வயது சரி. என் மகன் என்னை தற்பொழுது பராமரித்து வருகிறார். 10 வருடத்திற்கு முன்பு நான் ஏரி வேலைக்குச் சென்றேன். விபத்து சமயத்தில் நான் எவ்வித வேலைக்கும் செல்லவில்லை.

2) நான் சாலையைக் கடக்கும் பொழுது விபத்து ஏற்பட்டது என்றாலும், 1ம் எதிர்மனுதாரர் வாகனம் விபத்தில் சம்மந்தப்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. மனுவில் வெவ்வேறு தலைப்புகளின் கீழ் கோரப்பட்டுள்ள தொகைகள் மிக அதிகம் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் சொற்ப காயங்கள் என்றாலும், கொடுங்காயங்கள் ஏற்பட்டன என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யத் தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.